வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது:

உ
சிவமயம்

# இந்து சாதனம்
# HINDU ORGAN

சைவ பரிபாலன சபை வெளியீடு

பிரதி விலை சதம் ..

ஆரம்பம்: விரோதி வரு (1889) ஆவணிமீ 28-ம் உ

அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 35

புத் - அஅ] யாழ்ப்பாணம்: நள வரு புரட்டாதி மீ கரு-உ வெள்ளிக்கிழமை (1 - 10 - 1976) [இல: உசா

# தாயன்பு தவிர்க்கத் தவம்

## தேவி வணக்கத்தின் திவ்விய பயன்

வேதகாலத்திற்கும் முற்பட்டது அன்னையாகிய சக்தியின் வழிபாடு வேதகாலத்திலும் சக்தி வழிபாடு வழங்கிவந்தது என்பதற்கு இருக்கு வேதம் சான்று தருகிறது. ஆதிபராசக்தியே உலக அன்னை என்ற கொள்கை அந்தக்காலத்திலேயே முனிவர்களுடைய ஆச்சிரமங்களில் நன்கு பயிலப்பட்டிருந்தது

நாளடைவில் ஞானசத்தியைக்கலைமாமகள் என்றும கிரியாசக்தி அல்லது செயல் திறனைத் திருமாமகள் என்றும் இச்சாசக்தியை மாகாளி என்றும் கருதுவாராயினர். இத்தத்துவத்திலேதான் நவராத்திரி பூஜையும் அமைந்துளது. முதல் மூன்றுநாளும் இச்சாசக்திக்குரிய வழிபாடு அடுத்த மூன்றுநாளும் கிரியாசக்திக்குரிய வழிபாடும் கடைசி மூன்றுநாளும் ஞானசக்திக்குரிய வழிபாடு

வளர்ச்சி 2-ம் பக்கம்

### நல்லூர் பணிமனையில்

யாழ்ப்பாணம் சுகாதாரசேவை அத்தியட்சகர் பணிமனைப் பகுதியினர் நல்லூரிலுள்ள பணிமனைக் காரியாலயத்தில் கலைமகள் விழாவை இன்று (1-10-76) கொண்டாடுகின்றனர். மாலை 5 மணிக்கு பூசை நிகழும், திரு. க. தணிகாசலம் தலைமை உரை வழங்குவார். அடுத்து செல்வி புஷ்பா சைலநாயகம் சொற்பொழிவு நிகழ்த்துவர் அடுத்து செல்வி குணபூஷணம் நாகலிங்கம் அவர்களின் இன்னிசை விருந்து இடம்பெறும்.

### திருக்கடவூர்
### அபிராமியம்மைப் பதிகம்.

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராதா நட்பும்
கன்றாத வளமையுங் குன்றாத இளமையும்
கழுபிணியி லாத உடலும்
சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள்வா ராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும்உத விப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்;
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!. (1)

## கல்வித் தத்துவம் முற்று முழுதாக முடிந்ததல்ல

### கலாநிதி கைலாசபதியின் கருத்து

"இக்கல்லூரியில் நான் பெற்ற அநுபவம் என்னை இந் நிலைக்கு உயர்த்தியது. அன்று 1950-ஆம் ஆண்டு கல்லூரிச் சஞ்சிகை 'இந்து இளைஞனுக்கு நான் ஆசிரியனாக இருந்தேன்', பின்னர், இந்நாட்டுத் தேசிய தினசரிகளிலொன்றான "தினகரன்" பத்திரிகையின் ஆசிரியனாக உயர்ந்தேன்'

இவ்வாறு இலங்கைப் பல்கலைக் கழக யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் கலாநிதி க. கைலாசபதி அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பரிசளிப்பு விழாவில் பரிசுத்தின உரையை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா 28 9 76 செவ்வாய்க்கிழமை மாலை கல்லூரி அதிபர் திரு. பொ.ச. குமாரசாமி அவர்கள் தலைமையில கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது.

கலாநிதி க. கைலாசபதி அவர்கள்தொடர்ந்து தமது உரையில் இந்நாட்டு கல்வி வளர்ச்சியை மூன்று படித்தரங்களாக பிரிக்கலாம் ஒன்று வெள்ளையர் ஆட்சிக்காலம பல மைலகளுக்கு அட பால் இருந்து கொண்டு அவர்கள் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான கல்வி இங்கு கொடுக்கப் பட்டது இரண்டு 1930க்கும 1950 க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆங்கில மூலம் ஆரம்பமாகிய புதிய கல்வி முறை மூன்று, மாணவர்களை நடுமையப்படுத்திய இன்றைய கல்வி முறை.

அன்று கலையியல் வேறு, அறிவியல் வேறு என்ற முறையில் கல்வி அமைந்தது இன்று இந்நிலையும் கூடிய கல்வித்திட்டம் நடைமுறையில உள்ளது. கல்வி சூழ்நிலையை அனுசரித்தாக அமையவேண்டும் அது வாழ்க்கைக்கு ஏற்றதாகவும் இருக்கவேண்டும்.

கல்வி வளர்ச்சி இன்று ஒரு சீருடையதாக இல்லை

(வளர்ச்சி 3 ஆம் பக்கம்)

### தேவாரப் பண்ணிசை வகுப்பு

நல்லூர் ஆறுமுக நாவலர் சபையார்கள் நாவலர் மணடபத்தில் தேவார வகுப்பொன்றினை கிரமமாக ஸ்ரீ மகேஸ்வர ஐயர் ஞானகியமமான ஆசிரியராகக் கொண்டு நடத்தி வருகின்றார்கள்.

29-9-76 புதன்கிழமை சபை யாதரவில நடைபெற்ற கந்தபுராணப் பூர்த்திப் படிப்பின் போது முற்றுந்தேறோரைப்பல டயின்று அகில இலங்கைத் தேவாரப்பண்ணிசை வகுப்பில சித்தி எய்திய பிள்ளைகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

இவ் வகுப்பில்புதிதாகச் சேர்ந்து பயில விரும்பும பிள்ளைகள வருகிற விஜயதசமி அன்று தங்கள பெயர்களைப் பதிவு செய்து பயனுறுவார்களாக.

## "முயற்சி திருவினையாக்கும்"

### ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய சுவாமிகள் உயிர்ப்பலி நிறுத்தம்பற்றி கருத்து

"ஆலயங்களில் உயிர்ப்பலி இடும்வழக்கம் அறவே ஒழிக்கப்படவேண்டும்; எப்பகுதியில் இச்செயல் நடைபெற்றாலும் அதை ஒழிக்க அனைவரும் பாடுபடவேண்டும்; முயற்சி திருவினையாக்கும்". என்ற நம்பிக்கையுடன் பிரசாரம் செய்யுங்கள்;

நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய சுவாமிகள் பலிநிறுத்தப் பிரசாரக் குழுத் தொண்டர்களுக்கு பேட்டியளித்தபோது மேற்கண்டவாறு கூறினார்கள்

வளர்ச்சி 2-ம் பக்கம்

### பண்டிதமணிக்கு
## கலாநிதிப் பட்டம்
### பல்கலைக் கழகம் கௌரவிக்கின்றது

சைவ தமிழ்ப் பேரறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்குக் கலாநிதி என்னும் கௌரவப் பட்டத்தை வழங்கிக் கௌரவிக்க இலங்கைப்பல்கலைக்கழக ஆளுனர்சபை தீர்மானித்துள்ளது.



கலாநிதி என்னும் இக் கௌரவப் பட்டத்தை திரு. எம். பி டீ. எஸ். குலரத்தின, கலாநிதி. வீ. ரீ. கேரத குணரத்தின, திரு ஷேலி அமரசிங்க வணக்கத்துக்குரிய கலாநிதி வல்பொலராகுல, பேராசிரியர்கள் ஈ. ஓ ஈ. பேரேரா ஆகியோர்களுக்கும் வழங்க இருப்பதாகப் பல்கலைக் கழகத்துணை வேந்தர் கலாநிதி பி. பி. ஜீ. எல்; சிறீவர்த்தன அறிவித்துள்ளார்.

கந்தபுராணத்தின் காவலமான தக்ஷ காண்டத்துக்கு பண்டிதமணி அவர்கள் எழுதிய உரையை இலங்கைப் பல்கலைக் கழகப் பேராதனை வளாக இந்து மாணவர் சங்கம் 1967-ல் வெளியிட்ட போது பண்டிதமணி அவர்களைப் பேராதனைக்கு அழைத்துப் பெருஞ் சிறப்புச்செய்தது, குறித்த தக்ஷ காண்டத்துக்குப் பண்டிதமணி அவர்கள் எழுதிய உரையைப் பாராட்டிய இலங்கை சாகித்திய மண்டலம் 1968-ம் ஆ

(வளர்ச்சி 4 பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

நள ஹூ புரட்டாதி மீ கரு - உ வெள்ளி

## நூற்றாண்டு வளர்ச்சி நுகர்ந்த கல்லூரி

நிலையங்கள் நிறுவனங்கள் நீடூழி வாழும் நீர்மையைக் கண்டு மக்கள் மனமாக வாழ்த்துவது நிலவுலகில் இயல்பே. அத்தகைய புகழுக்குரிய சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் நூற்றாண்டு விழா தனிச் சிறப்புடன் நடைபெற்றமை இந்நாட்டின் கல்வித் துறைச் செல்வத்துக்கொரு கண்ணியமான எடுத்துக்காட்டாக அமைகின்றது.

சைவ மக்களின் தெய்வ சிந்தனைக்குக் கல்வி கட்டாயமான கடமை என்பதை நாவலர் நற்றகையாரின் காலத்து எழுச்சி நன்கு புலப்படுத்தியவகையில் அப் பணியைத் தொடர்ந்தாற்றிவந்த பெரியார்களில் மதிப்புக்குரிய சைவ சித்தாந்த விற்பன்னர் சிவபாத சுந்தரம்பிள்ளை விக்ரோறியாக் கல்லூரி அதிபராக இருந்தனர் என்று நினைக்கும்பொழுது இந்தப் பெருவிழாவின் பெருமை பெரிதாகின்றது.

சைவ நெறி வாழ்க்கையில் நிலவச்செய்த பணியாற்றிய சிவபாத சுந்தரனாரின் சேவையின் பயனே இக்கல்லூரி மிக்க வளம் பெருக்கும் உயர்தர நிலையமாய் இயங்க வழி வகுத்ததென்று பழைய மாணாக்கர் பலர் கூறுவதுண்டு. கல்லூரியை நிறுவிய பெரியார்கள் விசேடமாகத் திரு. செல்லப்பா பிள்ளை அவர்கள் பண நிலை வறுமைக் காலத்திலும் நிலையம் நிலை குலையாது வளரப் பெரிதும் உழைத்தனர்.

சைவ நெறி வழிவழி வளர்ந்து இக்கல்லூரி எக்காலத்தும் ஒரு எடுத்துக் காட்டாக விளங்கவேண்டும் என்று இறைவனை வணங்குகின்றோம்.

x x x

## இபபடி எங்கும் இனி, மது அரக்கன் மறைந்தாலென்ன!

பரந்தன் கிளிநொச்சிப் பகுதிகளில் மதுக் கடைகள் அகற்றப்படும் என்ற செய்தி பெரியதோர் ஆறுதல் ஆக இருக்கின்றது.

மழையின்மைக்குக் காரணம் மதுவெள்ளம் பாய்வதனுல் என்றுதான் நாம் கருதுகின்றோம்.

உலகியலுக்கும் மறுஇயலுக்கும் ஊறு விளைவிக்கும் போதைப் பொருளைப் புறக்கணிக்க மக்களும் அரசும் ஒருங்கு சேர்ந்துழைத்தால் வரட்சியைப் போக்கும் மாரிவளம் வந்தே தீரும்.

மதுபானம் மனித வர்க்கத்துக்கு ஈனம் என்ற உண்மையை மக்கள் உணரும் காலம் வந்துவிட்டது. பரந்தனும் கிளிநொச்சியும் இந்தப் பாடத்தைத் தொடக்கி வைத்திருக்கின்றன.

## முயற்சி திருவினையாக்கும்

1ம் பக்கத் தொடர்ச்சி

அராலி தெற்கு வாலையம்மன் கோயிலில் விஜயதசமித் திருநாளில் ஆடு வெட்டும் அதிபாதகச் செயல் ஒழிக்க முடியாத ஒன்றாக இருப்பதுபற்றி வேதனை கொண்ட சைவப்பேரன்பர்கள் ஆதீனத்தில் சுவாமிகளிடம் ஆறுதல் பெறச்சென்றபோது இக்கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இப் பலி நிறுத்தம் தொடர்பாக சில ஆண்டுகளுக்கு முன்பு ஒருவேண்டுகோள் விடுத்ததையும் நினைவூட்டி, தாம பிரார்த்தனைகளிலும் இக்கொடுஞ்செயல் ஒழிய வழிபாடு செய்து வருவதாகக் கருத்துத தெரிவிததனர். ந. நி



## ஆதி சக்தி பாமாலை.

‘அருட்கவி’ சீ. விநாசித்தம்பி

பல்லவி

ஆதிசக்தி ஞானசக்தி அம்பிகையே வந்தருள்வாய்
நீதிவழி செல்வம் கல்வி நிறைவாகத் தந்தருள்வாய்.

சரணங்கள்

1, சிங்காரக் கைலையிலே திருநடனம் செய்திடுவாய்
சீரடியார் வேண்டும்வரம செழிததிடவே பெய்திடுவாய்
பாங்கான பரமனுடன் பகிரண்டம் காத்திடுவாய்
பத்திவயல் பொங்கதவப் பயிராகப் பூத்திடுவாய் (ஆ)

2, சிங்கமிசை துர்க்கையெனத் தீவினைகள் நீக்கிடுவாய்
செங்கமலத் திருமகளாய்ச் செல்வநலம் ஆக்கிடுவாய்
தங்குகலை வாணியெனச் சகலகலை குருவடிவாய
தருணமழை போலருள்வாய் சரசுவதிப் பெருவடிவாய் (ஆ)

3. எண்ணான்கு தருமஞ்செய் தெழிற்கம்பா தீரத்திலே
எவ்வுலகும் மிளிரவைத்தாய் ஏத்துசிவன் பாரத்திலே
பண்ணோங்கப் பயனோங்கப் பழமதுரை ஆண்டவளே
பயிலடியார் கதியோங்கப் பரவுதவம் பூண்டவளே (ஆ)

4. ஓங்கார வெளியினிலே ஓங்குதிருப் பதந்தூக்கி
உபயபதம் சுரந்திடுவாய்! உன்னடியார் துயர்நீக்கி
தீங்கான மகிடனது சிரமறுத்த நாரணியே!
சித்தாந்த தத்துவத்தின் திறமுரைத்த பூரணியே! (ஆ)

5. உலகாட உயிராட ஒளிர்பூத மைந்தாட
ஒன்பதுகோள் நின்றாட ஓரெட்டுத் திசையாட
கலையாடத் துதிபாடும் கவிவாணர் தொகையாட
கற்பகச் செந்தமிழாட காவியமோ வியமாட (ஆ)

6. நாலுமறை ஈரேழு நண்ணுதந் திரந்திசழ
நான்முகனும் நாரணனும் ஞானமலர்த் தாள்புகழ
வேலழகன் யானைமுகன் மேவியிரு பாங்குவர
விடையழகன் விடைகேட்டு விளங்குவரம் கோடிதர [ஆ]

7. பாடுகின்ற நாவிருப்பாய் பங்கயமாம் பூவிருப்பாய்
பைந்தமிழின் மீதிருப்பாய் பலதொழிற்பூங் காவிருப்பாய்!
வாடுகின்ற மனமிருந்து மந்திரத்தேன் வழங்கிடுவாய்
வகரமென விழிகாட்டிச் சிகரமொடு விளங்கிடுவாய் [ஆ]

8. மழைபொழிய வளம்பொலிய மன்னுகொடைப் பயன்பொலிய
மறைபொலிய சைவமதம் வளர்க்கின்ற குலம்பொலிய
குழைவுமனத் திருத்தொண்டர் கூட்டமுடன் தவம்பொலிய
குருமுறையும் திருமுறையும் கோயில்களும் வளம்பொலிய [ஆ]

9, கொலைகளவு கள்காமம் குலவுபசு வதைநீங்க
குத்திரங்கோள் ஏமாற்றுக் கொடியவினைத் துயர்நீங்க
நிலைகாட்டும் புராண மனு நீதியிலே உலகோங்க
நீற்றுடனே ஐந்தெழுத்தை நினைத்துவரும் சுகமோங்க. [ஆ]

## பழைய பள்ளிக்கூடத்தின் பண்பான வளர்ச்சி

### இந்துக்கல்லூரிப் பரிசுத்தினத்தில் அதிபரின் ஊக்கம் தரும் அறிக்கை

**கற்றல் கற்பித்தல் முறையில் மாற்றம்:**

ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை புதிய ஆரம்ப இடைநிலைக்கல்வியை நாம் செயற்படுத்தும் காலக்கட்டத்து புகுத்தப்பட்ட மாற்றங்களையுணர்ந்து அவ்வறிவுபெற ஆசிரியர்களும், கல்வி நிர்வாகிகளும் பலவழிகளிலும் தீவிரமாகத் தெழிற்பட வேண்டிய நிலைக்குள்ளாக்கப்பட்டோம். தத்துவார்த்த ரீதியாகப் பார்க்குமிடத்து கற்கும் துறைகளிலும், கற்றல் கற்பித்தல் முறைகளிலும் கடைபபிடிககபபட்ட மாறறங்கள் பொருத்தமானவையாயும், பயன்றரக் கூடியனவாயும் காணபபடுகின்றனவெனினும் நாட்டின் பொருளாதார சமுதாய மாறறத்திறகும், முன்னேற்றத்திற்கும் இவை எந்த அளவிலான பயனை ஏற்படுத்துமென வென்பதை இன்று எடைபோட்டுத் திட்டவட்டமாகக் கூறவியலாது. சிரேஷ்ட இடைநிலைக் கல்வி, பாடசாலைப் பின் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி ஆகியவற்றின் மாற்றங்களையும் முற்றாகச் செயல்படுத்தியதன் பின்னரும் சில ஆண்டுகள் சென்றதன் பின்னரே இவற்றின் முழுமையான பலனையும் நாம் உணரவோ எடைபோடவோ முடியும். க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் சித்தி விகிதாசாரத்திலும் பார்க்க தே. பொ. க. த. பரீட்சையில் கூடியவளவு சித்தி விகிதாசாரத்தை மாணவர்கள் பெற்றுள்ளனர். எனவே முன்னிலும் பார்க்க புதிய திட்டத்தில் கூடியவளவு தொகையான மாணவர்கள் சிரேஷ்ட இடைநிலைக் கல்வியைப்பெற வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. க. பொ. த. (உயர்தரம்) வகுப்பில் அனுமதி பெற்றவரிலும் பார்க்க தே. க. உயர் தராதரப்பத்திர பரீட்சை வகுப்பு H. N. C. E. இல் கூடுதலான மாணவர்கள் இவ்வாண்டு அனுமதிக்கப்பட்டுள்ளனர். [illegible] இடைநிலைககல்வியுடன் பாடசாலையிலிருந்து [illegible] மாணவர்களின் தொகையும் குறைவதற்கும் வழிவகுக்கபபட்டுள்ளது.

(வளரும்)

## பண்டிதமணிக்கு

1-ம் பக்கத்து வளர்ச்சி

ரம் ரூபா பரிசில் வழங்கியதுடன் சாகித்திய மண்டலத்தின் உயர் உறுப்பினர் என்ற விருதினையும் பண்டிதமணி அவர்களுக்கு வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத்தில் நடைபெற்ற மாபெரும் விழாவில் வழங்கியது.

நாவலர் வழிவந்த முதுபெரும் தமிழறிஞரான பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் இலக்கியம் மொழி, சமயம் ஆகிய துறைகளுக்கு சென்ற அரை நூற்றாண்டுக்கு மேலாகச்செய்த சேவையினை இலங்கைப் பல்கலைக் கழகம் பாராட்டி கலாநிதி என்ற கௌரவப் பட்டத்தை இப்பொழுது வழங்கிக் கௌரவிக்கிறது. என்பது குறிப்பிடத்தக்கது ந. நி.

## தாயன்பு களிர்க்க

[1ம் பக்க வளர்ச்சி]

மாக அமையப்பெற்றிருப்பதை உணரலாம்.

இந்த மூன்று தத்துவங்களும் ஒன்றுபட்ட நிலைதான் சண்டிகாதேவி. இந்த மகா தேவியின் வழிபாட்டைத் தனிப்பெரும் நோக்கமாகக்கொண்டு, சக்திமயமான கலைகளைவளர்க்கும் முயற்சிகளைநினைவூட்டுவது நவராத்திரிவிழா. வீடுகளிலே பொம்மைகளை அலங்கரித்துக் கொலு வைப்பதால் அழகுணர்ச்சி வீடுகளில் அதிகரிக்கிறது. கோயில்களிலே தெய்வ சொரூபங்களை அலங்கரித்துத் தரிசிப்பதால் அருளுணர்ச்சி வளருகிறது. குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே என்பது இந்த நவராத்திரி தினத்திற்கு மிகப்பொருத்தமானதாகும். கிராமதேவதைமுதல் மகாகாளிவரை எல்லாத் தேவிகளும் சண்டிகாதேவியின் அம்சங்களே, பெண்கள் எல்லாம் உலகத்தாயின் அம்சங்களே, நம்முன்னோர் சர்வமும் சக்திமயமாகக்கண்டார்கள். பெண்மைக்குத் தாய்மை இடங்கொடுத்துப் போற்றிய பெருமை இந்துக்களுக்குரியதாகும்.

ஸ்ரீ இராமகிருஷ்ணபரமகம்சதேவரும் மகாகவி பாரதியாரும் சக்தி உபாசகர்களே. பரமகம்சர் ஓதாதுணர்ந்த உயர் ஞானியாகத் திகழ்ந்தார். பாரதியார் ஓதி உணர்ந்தவராயினும் கல்லாதகலையாகக் கவிதையைகற்றுக் கொண்டார் இருவரும் சக்தியை உலகம்மையாய் கண்டவர்கள் ஆகையால் உலகம் எல்லாம் ஓருயிர்' என்ற தத்துவத்தைப பறை சாற்றினர்கள் இருவரும் அன்னையின் மடியிலே விளையாடிய ஞானக்குழந்தைகள்.

உலகிலே எல்லாருக்கும் இன்பவாழ்வு வாழவே விருப்பம். ஆனால் இன்பவாழ்வு எதுவென்று அறியாமையே அவர்களிடத்து உள்ளகுறை, இறைவனோடு இசைவு பொருந்தியதே உண்மை இன்பம், அதுவே பேரின்பம், பேரின்பத்தோடு கூடியதே இன்ப வாழ்வு. ஆகனேச்சுந்தரர் “ இறைக ளோடிசைந்த இன்பம; இன்பத்தோடிசைந்த வாழ்வு ” என்று குறிப்பிடுகின்றார்.

[நாவலப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தில ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா, முத்தையா நவராத்திரி விழாவைத் தொடக்கி வைத்து ஆற்றிய உரை]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலரங்கம்

### அபிராமியம்மைப் பதிகம்
(மூலம்)
(இலவச வெளியீடு)
நல்லை ஆதீனம்.

நல்லை ஞானசம்பந்தராதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் திருவுளப் பாங்கின் வண்ணம் வெளியீடு பெற்றது.

நவராத்திரி வெளியீடு

இந் நூலின் பதிப்புரையின் கண்ணே பதிப்புரையில் ஆதீன மேலாளர் திரு செ. சத்தியமூர்த்தி B. Sc. J P அவர்கள் குறிப்பிட்டுள்ள ற்றுள் சில பகுதிகளை இங்குத் தருகின்றேம்.

... .. ... இந் நூலின் ஆசிரியர் அபிராமிப் பட்டர் என்பவர். அபிராமியந்தாதியைப் பாடிய பின் இவர் பெற்ற பெயராகும் ... ... ... ...

அம்மையின் அருள் தேக்கம் இவரது உணர்வில் மிக்கிருந்தமையால உலகி லுணர்வுகளும் உலகியல் ஒழுக்கங்களும நாளடைவில் தூர்ந்து வரலாயின. ... ... ...

அபிராமியம்மையைப்பற்றி இரு பதிகங்களுள்ளன. முதற் பாடலில் அம்மையின் திருவுருவினைக் கேசாதிபாதமாக நினைத்து உள சொல்கின்றார் ஆசிரியர், இரண்டாவது பாடலில் அம்மையின் திருப்பெயர்கள் பலவற்றையும் எண்ண மகிழ்கின்றார் ஆசிரியர் தம்சிறுமை கூறுவார் போல உலகினரின் சிறுமை குறித்து எண்ணி, அவருக்கும் அருள் செய்யும் பெருங் கருணையைப் பல பாடல்களில் குறித்துச்செல்கின்றார். முப்பத்திரண்டு அறங்களையும் வளர்க்கும் நின்னை மனைவியாகப்பெற்றும். நின்கணவர் ஓடேந்து உழல்வதேனே என நகைச் சுவைபட ஒரு பாடலில் வினவுகின்றார். ஆங்ஙனம் எல்லாம் அம்மையின் பெருங்கருணையை வியந்தும் நயந்தும் கூறியருளும் ஆசிரியர் தம்மைக் காத்தருளுமாறு வேண்டியிருப்பது நாமும் அம்மையிடத்து வேண்டிப்பெறத்தக்க தொன்றாகும் ": வஞ்சக் கொடியோர்கள்" எனத்தொடங்கும் பாடலைக் காண்க 'கலையாத கல்வியும்', 'சகல செல்வங்களும்' எனத் தொடங்கும் இரு பாடல்களும் அம்மையிடத்து வேண்டிப்பெறும் பேறுகளாக அமைந்தவை இம்மைக்கும் மறுமைக்கும வருத்தம் வந்தடையாதவாறு காத்தருளும் அம்மையின் அருட்பதிகங்கள் இரண்டும் நாமு பாராயணம் செய்யதத் தக்கவையாகும்.

... ... அபிராமியம்மை புகழ் நூலாகிய அந்தாதியையும். இரு பதிகங்களையும் அன்பர்கள் நாளும் பாராயணம் செய்து எல்லா நலன்களையும் பெறுவாராக, —

### சிவதி புராணம்
ஆக்கம் :
பண்டிகர் க. வீரகத்தி
வாணி, கரவெட்டி.
விலை: ரூபா 1-00;
பெறுமிடம் :
"வான் முகில்"
வாணி, திருநெல்வேலி யாழ்.

"கோலம் பலவாய்க்
குணம்பல வானலும்
மூலத்தில் ஒன்றான
முன்னைப்பழம்பொருளே"

என்று சிவசக்தியாம் முழுமுதலை "வராத்திரியணங்கே" என நாமமிட்டழைக்கும் பண்டிகர் "சிவதி புராணம்" என்னும் சக்தி புராணத்தை அமைவாக அழகாக ஆக்சியிருக்கின்றனர்,

சக்தி வழிபாட்டுத் தகைமை மிக்க நவராத்திரி காலத்தில் இவ் வெளியீட்டைப் பற்றிக் கருத்துரைப்பது மிகப் பொருத்தமாகும்.

அகிலாண்ட நாயகியை ஆராவன்பு தவழும் அன்னையை அவரவர் ஆசைமேலீட்டினால் அழைக்கும் நாமங்கள் யாவும் அந்தப் பராசத்திக்குகப்பானவையே

பண்டிகர் வீரகத்தி அவர்கள் கண்ட காட்சியைப் பலப் பல வாறுகப் பாட்டிலமைத்துப் பணிந்து மனம் மிக மகிழ்ந்திருக்கின்றார் என்பதை இந்நூல் நன்கு புலப்படுத்துகின்றது

'பெருங் கருணைப் பேராறே' என்றழைக்கும் பெண்மைப் பெருஞ் சுடர் அழகு தமிழ் கூடலிலே சங்கம் வைத்து அன்று தமிழ் செய்த மீனாட்சியென்று புலவர் உள்ளம் பூரித்துரைக்கின்ற நயர்போன்ற பல சுந்தனைகள் பொதிந்த இந்த வெளியீடு நன்கமைந்துள்ளது

### நாமமதிற் சைவராய் நாம் வாழ்தல்முறையா?

"வேடுவர் குலத்தில் வந்த நாகன் என்பவன் தனக்குக் குழந்தைச் செல்வமில்லையே என்பதற்காகப் பெருவிழா எடுத்தபோது, சேவல்களையும் ஆடுகளையும் மயில்களையும் உயிரோடு காணிக்கையாக விட்டான்" என்று பெரிய புராணம் கூறுகிறது. இதைச் சேக்கிழார் சுவாமிகள்,

"வாரணச் சேவலோடு
வரி மயில் குலங்கள்,
விட்டு ............... "

என்றார். 'வெட்டி', என்று கூருது 'விட்டு' என்று அழகாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

மிருக வதை செய்வதையே தொழிலாகக்கொண்ட வேடர்களே ஆலயத்தில் உயிர்ப்பலி இடக்கூடாது என்ற கொள்கையுடன் நடந்து கொண்டதை நாம் சிந்திக்க வேண்டாமா? 'நாமமதிற் சைவர்களாக வாழ்ந்திடுதல் நன்றோ சொல்வீர்" என்று நம் மக்களைப் பார்த்துக் கேட்க வேண்டிய சூழ் நிலையில் எத்தனை தொகுதிகளுள்ளன; இன்றும் பழிக்கஞ்சாது சிலசில கிராமங்களிலே கோயிலிற் பலி நடத்துகிறார்களாம்; இவ்வழக்கம் ஒழிய யாவரும பாடுபட வேண்டும்' இது பெரும் புண்ணியமாகும்"

யாழ் ஈச்சமோட்டை ஸ்ரீ ஞான வைரவர் கோயிலில் நவராத்திரிகால விசேட விரிவுரையின்போது நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீபரமாசாரியசுவாமிகள் மேற் கண்டவாறு கூறினார்கள்.

### கல்வித் தத்துவம்
1ம் பக்கத்து வளர்ச்சி

நகர்ப்புறம் நாட்டுப் புறம் வேறுபாடு தொடருகின்றது, கல்வித்தத்துவம் முற்று முழுதாக முடிந்த ஒன்றல்ல காலத்துக்கு ஏற்ப மாறுதலுடையதாக அது இருக்க வேண்டும்.

### அரியாலையிற் சிரமதானப் பணி

அரியாலை கொட்டுக்கரைப் பிள்ளையார் கோயில் புனரமைப்புப் பெற்றுப் புனிதமாக விளங்குகிறது. நல்லவயல்களின் நடுவில் அமைதியான ஊரில் அழகாக அமைந்த ஆலயத்தைச் சூழ நாற்பது குடும்பங்கள் நல்ல முறையில் வாழுகின்றார்கள். பெரும்பாலானவர்கள் தொழிலாளராயினும் தாமே சிரமப்பட்டு ஒரு மல ... புதிய வீதியொன்றைப் பிள்ளையார் கோயில் வரைக்கும் அமைத்துள்ளார்கள். இப்புதிய சிரமதான வீதியை மில்க்வைற் அதிபர் திறந்து வைத்துப் பாராட்டிப் பேசிய கட்டத்தில் திருக்கோயில் குருக்கள், தர்மகர்த்தா, கிராமசேவகர்கள், மில்க்வைற்செய்தி ஆசிரியர் உட்படப்பலர் பேசினர்கள், இங்கே குடியிருக்கும் இளைஞர்கள் தங்கள் பகுதியில் பனைவளம் பெருக்குவதாக உறுதி பூண்டுள்ளார்கள். வயலோரங்கள், வீதியோரங்கள் வளவு எல்லைகள் எங்கும் பனையை வளர்த்துப் பயனைப் பெறுமாறு திரு. க. கனகராசா அவர்கள் வேண்டிக்கொண்டார். ... ... ... பொருத்தமான இடமாகும்.

## கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்
வழ. இல. 13037

வல்வெட்டி சின்னத்தம்பி கைம்பெண் இலட்சுமிப்பிள்ளை — வாதி
எதிராக
1. வல்வெட்டி பூததீதம்பி சுப்பிரமணியம் 2. பெண் செல்வரத்தினம்
பிரதிவாதிகள்

மேற்குறித்த இலக்கவழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்குக்கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்தை 1976-ம் ஆண்டு நொவெம்பர் மாதம் 17-ந் திகதி (17-11-76) புதன்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனத்தின் மதிக்கப்பட்ட விலை ரூபா 21276/66

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று சமரபாகுதேவன் குறிச்சியும் வல்வெட்டிக் குறிச்சியும் மரக் ராயன் தோட்டம் காக்கையன் குடியிருப்பு நி, ப. 10 குளி 16, 5/8 இது அளவின்படி நி. ப. 8 குளி 2 இதில் 1-ம் நம்பாத்துண்டுக்கு நி.ப. 3 குளி 16 இதில் தெற்குப்புறமாக குளி 16 நீக்கி மிகுதி நி.ப. 3 இதில் தென்மேற்குப்புறமாக குளி6½-ம் தென் கிழக்குப்புறமாக குளி ½-ம் நீக்கி மிகுதி நி.ப. 2 குளி 11 எல்லைகிழக்கு ஒழுங்கையும் சேனாதிராசாபெண இரத்தினத்துக்குடையவாதனமும் வடக்கு தினகரம்பிள்ளை பாறுபதியின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுடையவாதனம் மேற்கு ரோட்டு, தெற்கு கிட்டினபிள்ளை சேனாதிராசாவுக்கும் பெண் இரத்தினத்துக்குமுடைய வாதனம் இவ்வெல்லைக்குட்பட்டநிலம், கல்வீடு, கிணறு, குசினி பனைகள் மற்றும் வான்பயிர் செய்பயிர் அடங்கலும்,

### கணக்கு விபரம்

| | | |
|---|---|---|
| 1. | வழக்கு வைதத தொகை | ரூபா 3780—00 |
| 2 | 20 3.75 தொடக்கம் ரூபா 2000—க்கு 22 8.75 வரைக்கும் 12 வீத வட்டி | 100—00 |
| 3. | 23.8.75 தொடக்கம் ரூபா3380.00க்கு 17:11.76 வரைக்கும் 5 வீத வட்டி (வழக்குச்செலவும் சேர்க்கவேண்டும்) | 242 00 |
| | மொத்தம் | 4,22—00 |

க. நா. சுப்பிரமணியம்
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்

புலோலி மேற்கு,
புலோலி.
26-9-76
68 10-1

## கொமிஷன் விற்பனவு விளம்பரம்

மாவட்ட நீதிமன்றம் மல்லாகம்
வழ. இல. MB 493

1, பொன்னம்பலம் சிவஞானபோதமும் 2. பெண் பாக்கியமும் இருவரும் பண்ணாகம் தெற்கு சுழிபுரம் — வழக்காளிகள்
எதிராக
1. கிருஷ்ணர் தாமோதிரம்பிள்ளை ஆசிரியர் பிளவத்தை வட்டுக்கோட்டை கிழக்கு சித்தன்கேணி — எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும்குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும ஆதனம 1976-ம் அண்டு ஐப்பசி மீ" 27-ந்திகதி (27-10-76) புதனகிழமை பிற்பகல் 3மணியளவில் குறித்த ஆதனமிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற் குறித்த எதிராளி, வழக்காளிகளுக்கு ரூபா 4055/- ஐயும் மேலும் முதல் ரூபா 4005/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9% வீதம் 17-1-75 திகதியிலிருந்து 6-6-75 ந்திகதி வரைக்கும் வட்டியும அதன்பின்னர் முழுத்தீர்வைத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5ப் வட்டியும வழக்குச்செலவு ரூபா 584/30 கொடுபடவேண்டியிருப்பதாலும் (இதில் கொடுபட்ட செலவு 170/-)

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டை கோவிற்பற்று வட்டுக்கோட்டை மேற்கு இறை செழியனேடை பரப்பு நெல் இலாச்சம் 8½ எட்டரையும் கிணறும் பனைகளும் எல்லை கிழக்கு ரோட்டிலிருந்து இக் காணிக்கு வரும் ஒழுங்கை முகப்பும் கிருஷ்ணர் தாமோதரம் பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் வடக்கு சண்முகவடிவேல் பெண் மலர் மணிக்கு முரிய ஆதனம். மேற்கு வேலு அண்ணாமலைக்குரிய ஆதனம். தெற்கு போன் வைரமுத்து தம்பி நாயகத்தின்உரித்தாழரின் ஆதனம், இதிலடங்கலும

2. மேற்படி "இயந்தை, பரப்பு நில இலாச்சம் 4½ நாலரையும் வீடும், கிணறும் எல்லை கிழக்கு கந்தையா பெண் சண்முகத்துக்கும் முருகேசு பெண் செலலம்மாவுக்கும உரிய காணிகள், வடக்கு கணபதியார் கிருஷ்ணர் ஆதனம. மேற்கு ஒழுங்கை. தெற்கு ரோட்டு இதிலடங்கலும்.

கா. முத்துக்குமாரு ஐயர்
நீதிமன்ற ஆணையாளரும்,
கொமிஷன் விலைமதிப்பாளரும்

தங்கவேல் ஆலயம்,
சந்நிதிவேல்,
பருத்தித் 3
66, 1-10-

## ஈட்டுவழக்கில் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்
வழ. இல, ஈடு / 12484

வல்லுவெட்டி தம்பு சுப்பிரமணியம் — வாதி
எதிராக
கம்பர்மலை உடுப்பிட்டி ஐயாச்சாமி பெண் மாணிக்கம் — பிரதிவாதி

மேற்சொல்லிய இலக்கவழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த விற்பனவுக்கான அதிகாரத்தின்படி இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் 1976-ம் ஆண்டு கார்த்திகை மீ" 17 ந்திகதி புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் குறித்த காணியிடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று

உடுப்பிட்டியிறை "முடப்புளிடி" நி.ப. 0 எல்லை கிழக்கு கதிர்காமர் மாணிக்கத்துக்கு பெண் தங்கம்மாவுக்குமுடைய வாதனம், வடக்கு குமாரு பெண் ஆச்சிக்கும் மறு பேருக்குமுடையவாதனம் மேற்கு கதிர்காமர் மாணிக்கத்துக்கும் பெண் தங்கம்மாவுக்கு முரியவாதனம், கொத்தன் மாணிக்கத்துக்கும் மறுபேருக்குமுடையவாதனம் இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள், வடலிகள் கிணறு அடங்கலும பொரியலாய் 1/3 பங்கில் சொரியலாய் 2/3 பங்கில் ½ கங்கும்.

2 உடுப்பிட்டியிறை ஊட்டியான் தறை நி.ப. 4¼ எல்லைகிழக்கும், வடக்கும், மேற்கும் கறுவல்தம்பு ஐயாச்சாமியின் உரிமைக்காரருக்குடைய வாதனம் தெற்கு கொத்தன் மாணிக்கத்துக்கும் மறுபேருக்குமுடைய வாதனம்- இவ்வெல்லைக்குட்பட்டவையாவிலுஞ சொரியலாய் ½ பங்கில் ½ பங்கும்.

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை | ரூபா | 1440-00 |
| இதில் ரூபா 1000-00க்கு 7-10-73 தொடக்கம் 8-5 74 வரை 12 வீத வட்டி | ரூபா | 68-40 |
| ரூபா 1508-40க்கு 9-5-1974 தொடக்கம் 8-11-1976 வரை 5 வீத வட்டி | ரூபா | 168-50 |
| மொத்தம் | ரூபா | 1696-90 |

R. S. இராமநாதன் J. P
நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்
விலைமதிப்பாளர், ஏலவிற்பனையாளர்
Commissioner of Sales, Valner and Auctoneer.

"உமாபதி"
நெல்லண்டை ரோட்,
தும்பளை,
பருத்தித்துறை,
50 17-9-76

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## THOUGHTS TO BE TREASURED

நான் முன்னம் செய்த விதிவழி தானல்லால்
வான் முன்னம் செய்து அங்கு வைத்தது ஓர்
மாட்டு இல்லை,
கோன் முன்னம் சென்னி குறிவழியே சென்று
நான் முன்னம் செய்ததே நல்நிலம் ஆனதே

There is no fate ordained by the excellent Lord except in accordance with the deeds performed by me in previous births. I prostrated myself in the Lord's presence following the prescribed path and it led me to the heavenly world of the Lord.

Hindu Organ

Friday, October 1, 1976

## Day for Dedication

PARTICULAR dates have acquired special significance as acknowledged by the people of the whole world. How these occasions count in the life of man can be gauged by the need for the ideals underlying these days of remembrance that is being felt almost everywhere in the world.

The Gurupoojahs of religious saints and teachers have a significance all their own as such observances lead to spiritual awakening and awareness in temporal living. There are other internationally observed days that have a special import in the context of man's endeavour to live well. One such observance is on October 2, a day that constantly keeps mankind reminded of the high potential of soul force.

It may be appropriately said that Mahatma Gandhi was the most successful interpretor of the need for acquiring soul force in any struggle for redress of genuine grievances. Dedication to Truth was his ideal; that meant the discharge of duty. Gandhiji, however, was a religious devotee all the time; his parting phrase was his oft repeated Lord's Name.

Let us not, therefore, classify October 2 in the general category of international dates of remembrance. Leaders of movements of all description see the correct definition of true leadership in the lofty life of this Great Apostle of non violence. Members of mass struggle find in the several crusades of this Soul Force Crusader, the proper procedure for such deliberations Rulers of the people who saw in the Gandhian movement something that was directed against them knew well that there was no malice or ill-will involved. Hence the purity of the high pedestal — leadership of the Gandhian agitation.

And so October 2 is certainly a day to be understood and held as an exalting example.

## Mahatma Gandhi

The birth day anniversary of one of the noblest specimens of humanity falls on October 2nd Volumes have been written and millions of words have been uttered about this saint. In a crowded space, in a newspaper it is very desirable that some lines from howsoever humble a person and in howsoever feeble a manner are written. The following are just a few thoughts and recollections.

The Mahatma came only once to Sri Lanka. It is natural that he gave excellent advice as usual When an address of welcome was presented to him, he said that self-suppression, self-effacement and self-sacrifice were indispensable for any kind of public service whether it be for leaders or for workers and followers.

Another matter he stressed was that the education of any Hindu child is incomplete unless he has some knowledge of sanskrit.

Yet another point he stressed was, to use his own words, that the "hateful system of dowry" should be discarded completely.

A further point he emphasized was that God makes no distinction between His worshippers and that the doors of all temples should be open to one and all who wish to worship Him.

In one of his earlier utterances in Britain, he called vegetarianism as the "priceless and unique treasure of Hinduism".

Another dictum of his was the following "Happiness does not depend on what you can get but on what you can give'.

His humility, spiritual and otherwise was well-known. He gave expression to these poignant words:—

"In judging myself I shall try to be as harsh as truth as I want others to be. Measuring myself by that standard, I must exclaim with Surdas;—

'Where is there a wretch
So wicked and so loathsome as I'
I have forsaken my Magker
So Faithless have I Been

The Mahatma's attitude reminds us of the following sacred stanza from our holy Saiva scripture:—

வாழ்வெனும் மையல் விட்டு
வறுமையாம் சிறுமை தப்பித்
தாழ்வெனும் தன்மையோடு
சைவமாம் சமயம் சாரும்
ஊழ்பெறலரிது —
சால உயர்சிவ ஞானத்தாலே
போழிள மதியினானைப் போற்றுவார்
அருள் பெற்றாரே. [வாழ்

## Sale of Unredeemed Jewellery

I shall sell by public auction the unredeemed jewellery pawned before 1-4-1975 with Mr P. S. Appiah of Anaikoddai Road, Kokuvil West Jaffna. On Wednesday 13-10-1976 commencing at 9-30 a. m. at the said pawn shop.

**V. S. Cuttipillai**
Auctioneer.

"Raja Giri"
643, K. K. S. Road,
Jaffna,

(7. 24 & 1)

## THE WORSHIP OF THE SUPREME MOTHER GODDESS

BY V. SIVASAMY

From very early times before the dawn of civilization, man has been thinking about the force or Sakti who creates, protects and destroys the universe. It might be that he looked at the various natural phenomen and being struck with wonder, worshipped them. In course of time, the concept of a powerful force in, behind and beyond the world was evolved. Man thought of this force as male or female in the wake of his own experience in his own country, as a human being living with his family in the society Historians believe that long before the evolution of the patriarchal society where man dominated over his female counterpart, there had been a time when the female member of the human specy played a predominant role. And in such a society, the supreme Being was conceived of as the Mother Goddess or Sakti as the Hindus would call; the historical sources relating to Hinduism, especially, Saivism also lend support for this view.

In the Saiva form of Hinduism, the supreme God Siva and Sakthi are conceived of as inseparable. The Sakti is the energy of Siva and without Her, He cannot activate the universe. This Sakti is the grace Siva descending on all souls to save them from the mire of sin. The Siddhiyar, one of the most important works on Saiva Siddhanta succintly says "Sakti is the Grace of Siva and without the Grace there is no Siva and there is no Siva without Sakti." Such a pre eminent position is given to the Mother Goddess in Saivaism; correspondingly, atleast in theory, the woman is held in high esteem in the Hindu Society. Further Siva and Sakti is worshipped in one and the same form as Arthanarisvara (half Siva and half Siva). The poet Kalidasa praises these primeval parents of the universe as inseparable like the word and it's meaning.

In the social and religious life of the Hindus, festivals, rituals and observances (Vratas) play an important part. Each month of the year is held to be of some significance or other for one or the other God, or Goddess. In this way, the month of Purattathi (September —October, is important for the worship of the Sakti during the Navaratri festival which is celebrated for nine nights beginning from the first day of the bright half of this month. There is always a co-relation between the festivals and seasons in which they are celebrated. After a spell of a long dry summer, rainy seasons sets in by this time. The parched up land puts forth tender shoots of grass and other forms of minor vegetation. Trees which have shed leaves begin to have tender leaves. More especially in an agricultural society as ours, the farmer begins to plough and sow his paddy which also sprouts by this time. Thus the whole landscape becomes green and beautiful. It is nothing but fitting that a festival dedicated to the Almighty Mother Goddess is celebrated on a grand scale at this time of the year. It is also worth to remember that this festival has some rites relating to the futility cult of the dim past. The consecration of the nine types of grain usually grown in this region with the pure water and f llowing them to sprout to be taken out on the tenth day may be cited here

(To be continued)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday October 1, 1976,

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org